# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**Sessions Case No. 55/2015**

நாள்**: 27** .06.2024

**பெயர் : வசந்தா**

**PW1**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் ஏற்கனவே சாட்சி சொல்லியுள்ளேன். ராஜசிம்மன் அருவாள் வைத்திருந்தார் அது 2 ½ அடி நீளம் இருக்கும் அகலம் என் கை அளவு இருக்கும். அவர் வைத்திருந்தது மாட்டு கொம்பு பிடி போட்ட அருவாள் ஆகும். ராஜசிம்மன் ஆஜர் எதிரிகள் வரிசையில் முதலில் நிற்பவர் ஆவார். கண்ணனும், சுந்தரும் கையில் கத்தி வைத்திருந்தார்கள். அதன் அளவு 2 ½ அடி முதல் 1 ½ அடி வரை இருக்கும். கண்ணன் ஆஜர் எதிரிகள் வரிசையில் வலதுபுறத்திலிருந்து 3ம் நபர் ஆவார். மற்றவர்கள் எல்லாம் அருவாள் மற்றும் கத்தி வைத்திருந்தார்கள். பாபு, செல்வம் , ஆனந்த் , சுந்தர் , சக்கரவர்த்தி ஆகியோர் அரிவாள் வைத்திருந்தார்கள். மேற்படி நபர்கள் வைத்திருந்த அரிவாள் 2 ½ அடியும், அவர்கள் வைத்திருந்த கத்தி 1 ½ அடியும் இருக்கும். மேற்படி கத்தி மற்றும் அரிவாளால் வெட்டினார்கள். மற்றவர்களின் பெயர் தெரியாது. ஆள் தெரியும் .

**<u>1 , 3 முதல் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு கண் சரிவர தெரியாது என்றால் சுமார் 2 மாதங்களாக கண் பார்வை கொஞ்சம் மங்கலாக தெரியும்.என்னை வழக்கு தொடர்பாக போலீஸார் மொத்தம் மூன்று முறை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான். போலீஸார் விசாரித்த போது தற்போது முதல் விசாரணையில் சொன்ன யார் யார் என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் அதன் நீளம், மற்றும் அகலம் போன்றவற்றை மூன்று முறையும் போலீஸார் என்னை விசாரித்த போதும் சொல்லியிருக்கிறேன். ராஜசிம்மன், கண்ணன் மற்றும் செல்வம் ஆகியோரை தவிர மற்றவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரிகளுடைய தந்தை பெயர் எல்லாம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னை முதன் முதலில் போலீஸார் 16, 17 ம் தேதியும் இடைப்பட்ட

நேரத்தில் என்னை விசாரித்த போது எதிரி ராஜசிம்மனை தவிர மற்ற எதிரிகள் உடைய பெயர் குறித்தும் அவர்கள் என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்பது குறித்தும், அவர்கள் என் கணவரை எங்கு வெட்டினார்கள் என்பது குறித்தும் போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான் . நான் கொடுத்த புகாரில் ராஜசிம்மனை தவிர மற்ற எதிரிகள் உடைய பெயர் குறித்தும் அவர்கள் என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்பது குறித்தும், அவர்கள் என் கணவரை எங்கு வெட்டினார்கள் என்பது குறித்து சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் சுமார் 7.30 மணி அளவில் கரியாப்பட்டினம் காவல் ஆய்வாளர் எங்கள் வீட்டிற்கு வருகிறார். எங்கள் வீட்டில் வைத்து விசாரித்தார். அவரிடம் இந்த வழக்கில் உள்ள 12 எதிரிகள் உடைய பெயர்கள், அவர்கள் என்ன என்ன ஆயுதம் வைத்திருக்கிறார்கள் மற்றும் என் கணவரை எங்கு எங்கு வெட்டினார்கள் என்ற விபரம் குறித்து சொன்னேன். அவர் நான் சொல்ல சொல்ல எழு தி கொண்டு பின்னர் என்னிடம் படித்து காட்டினார் நான் சரியாக இருக்கிறது என்று சொன்னேன்.இவை எல்லாம் என் வீட்டில் வைத்து நடந்தது. என் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்று சொன்னால் கி.மீ கணக்கு எனக்கு தெரியாது.

நான் காவல் நிலையத்திற்கு செல்லும் பொழுது சுமார் 7.30 மணி நேரம் இருக்கும் . அங்கு காவலர்கள் இருந்தார்கள். அவர்களிடமும் நான் 12 நபர்கள் குறித்தும் விபரத்தை சொன்னேன் அவர்கள் எழுதி கொண்டார்கள். "சம்பவத்தின் போது என் வீட்டில் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கொல்லையில் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. எங்கள் வீட்டில் மாட்டு கொல்லை உள்ளது அங்கும் லைட் உள்ளது. இந்த சம்பவத்தை மின் விளக்கு வெளிச்சத்திலும் சூரியன் அந்தி சாயும் சமயத்திலும் நான் பார்த்தேன்".இந்த விபரத்தை மூன்று முறை போலீஸார் என்னை விசாரித்த போதும் , நான் கொடுத்த புகாரிலும் சொல்லியிருக்கிறேன். அந்தி சாயும் நேரம் என்றால் 6 மணி முதல் 7 மணி வரை . இந்த சம்பவம் சுமார் 2 லிருந்து 3 நிமிடங்கள் தான் நடந்தது. நான் மேற்கண்ட விபரங்களை நான் புகார்

வாக்குமூலத்திலும் சொல்லவில்லை, மூன்று முறை போலீஸார் என்னை விசாரித்த போதும் சொல்லவில்லை, ஆவணங்களில் சம்பவ இடம் இருட்டு என்று இருப்பதால் நான் சம்பவ இடத்தில் லைட் இருந்ததாகவும், மாட்டு கொட்டகையில் லைட்டு இருந்ததாகவும், அந்த சாயும் நேரத்தில் எதிரிகளை பார்த்தாக இந்த நீதிமன்றத்தில் பொய்யாக கொண்டு வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் வீடு இருக்கும் இடம் தெற்கு வடக்கு இருக்கும் தெருவில் கிழக்கு பார்த்து இருக்கிறது என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டிற்கு பின்னால் நெல்வயல்கள், மாங்கொல்லை, சவுக்குகொல்லை ஆகிய கொல்லைகள் ஏறத்தாழ 4 முதல் 5 ஏக்கர் என்று சொன்னால் எத்தனை ஏக்கர் என்று எனக்கு சொல்ல தெரியாது. சம்பவம் என் வீட்டிற்கு வடமேற்கே உள்ள சவுக்கு கொல்லைக்கு பின்னால் உள்ள நெல்வயலில் சம்பவம் என்றால் இல்லை . சம்பவம் என் வீட்டிற்கு பின்னால் வீட்டை ஒட்டியபடியே வீட்டிற்கு மேல்புறத்தே ஒட்டியபடி உள்ள வயலில் தான் சம்பவம் என்று சொன்னால் சரிதான்.

போலீஸார் வந்த போது சம்பவ இடத்தை யார் அழைத்துக்கொண்ட காட்டினார்கள் என்றால் நான் , என் மகன் அஜய், கொழுந்தனார் சும்பிரமணியன், மாமியார் வள்ளி ஆகியோர் அழைத்து கொண்டு காண்பித்தோம். போலீஸார் பார்த்தார்கள் அதை குறித்து கொண்டார்கள், ஊர் காரரும் இருந்தார்கள். நான் போலீஸாரிடம் சம்பவ இடமாக காண்பித்தது என் வீட்டை ஒட்டிய நெற்கதிர்களுடன் கூடிய வயலை தான் என்று சொன்னால் சரிதான். எனது வீட்டிற்கும் சம்பவம்நடந்ததாக சொல்லப்படும் கொல்லைக்கும் 250 மீட்டர் தூரம் என்று சொன்னால் இல்லை. எங்கள் வீட்டிற்கு வடக்கே இருப்பவருடையர் பெயர் வேதரத்தினம். என் வீட்டிற்கு தெற்கே கிருஷ்ணமூர்த்தி என்பவர் வீடு உள்ளது.

ராமமாமிர்தம் என்கிற கால்நடை டாக்கடரான என் சொந்தக்காரர் வீடு அமைந்துள்ள இடம் என் வீட்டிலிருந்து ½ கி.மீ தொலைவு. சுப்பிரமணியன் வீடு என் வீட்டிலிருந்து 2 ½ கி.மீ. தொலைவு அவர் இருக்குமிடம் தென்னம்பலம் கிழக்கு ஆகும். நான் முதன் முதலில் போலீஸிடம் புகார் வாக்குமூலம்

கொடுக்கும் போது என் வீட்டிற்கு 3 வாகனம்வந்தாகவும், அந்த 3 வாகனத்திலும் ஆட்கள் வந்தாகவும் நான் கூறினேன். எனக்கு ஒன்றும் வாகன எண்கள் எல்லாம் தெரியாது.என் ஊரில் இருந்து வாய்மேடு எவ்வளவு தொலைவு என்றால் 2 முதல் 3 கி.மீ. எனக்கு கி.மீ. கணக்கு தெரியாது. புரவக்குளம் எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவு என்றால் 10 கி.மீ இருக்கும். தகட்டூர் எங்கள் வீட்டிலிருந்து 10 கி.மீ மேல தான். நான் ஊராட்சி மன்ற தலைவியாக இருந்தேன். நானும், என் கொழுந்தனாரும் , அக்கம் பக்கம் உள்ளவர்களுடன் காவல் நிலையம் சென்றேன். போலீஸார் என்னை 16 – 17 விசாரித்த போதும், மறுமுறை 19ம் தேதி விசாரித்த போதும் என் கணவரை 3ம் எதிரி பாவு அரிவாளால் வலது விலாவில் முதுக்கு கீழே வெட்டினார் , 4ம் எதிரி செல்வம் கத்தியால் என் கணவரை இடது தோள்பட்டைக்கு கீழ் வெட்டினார், 5ம் எதிரி கண்ணன் அரிவாளால் என் கணவரின் வலது முன் கையில் வெட்டினார் , 6ம் எதிரி ஆனந்த அரிவாளால் என் கணவரின் வலது முழங்கையில் வெட்டினார் , 8 ம் எதிரி சுந்தர் எனது கணவரை வலது இடுப்புக் கீழே வெட்டினார், 7ம் எதிரி சக்கரவரத்தி என் கணவரை முன் மண்டையில் வெட்டினார் என்ற விபரத்தை 16-17 விசாரித்த போதும், 19.02.2007 ல் என்னை விசாரித்த போதும் சொல்லியிருக்கிறேன் . மேற்கண்ட விபரத்தை மேற்கண்ட இரண்டு தேதிகளிலும் போலீஸார் விசாரித்த போது நான் சொல்லவில்லை என்றும், போலீஸார் பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்ற பிறகு தியாகராஜன் உடம்பில் உள்ள காயங்களுக்கு ஏற்ப ஆயுதங்களுடன் எதிரிகளை தொடர்பு படுத்தி 28.02.2007ல் ஜோடித்தார்கள் என்றும் அதற்கு ஏற்ப நான் பொய்யாக எதிரிகளை தொடர்பு படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என் கணவர் பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் போட்டியிட்டுள்ளார். ஏற்கனவே என் கணவரை செண்பகராயனூரை சேர்ந்த முருகையன் என்கிற சாராய வியாபாரி கத்தியால் குத்தியதாக ஒரு வழக்கு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அதே போல் தென்னம்பலம் மேலக்காடு ராமசாமி மகன் நடராஜன் என்பவரை என் கணவர் ,ஜெயபால் , ரமேஷ்குமார் ஆகியோர்

அடித்தாக ஒரு கிரிமினல் வழக்கு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் லக்கி ஒயின்ஷாப் என்ற பிராந்தி கடையை ஏலம் எடுத்து நடத்தி வந்தார் என்று சொன்னால்ச ரிதான். என் கணவருக்கு பல நபர்களுடன் விரோதம் என்று சொன்னால் சரியல்ல.சம்ப நாளில் எங்கள் ஊரில் சுமார் 7.30 - 7.35 மின்சாரம் இல்லை என்று சொன்னால் சரிதான்.7.30 மணிக்கு போன மின்சாரம் இரவு 8 மணிக்கு வந்தது என்று சொன்னால் சரிதான். இந்தநாளில் இருட்டு நேரத்தில் விரோதத்தின் பெயரில் யாரோ எங்கள் வீட்டிலிருந்து மேற்கே 200 மீட்டர் அப்பால் இருக்கிற வயலில் வைத்து தாக்கிவிட்டார்கள் என்றும், நான் முதன் முதலில் 7.30 மணிக்கு போலீஸ் ஆய்வாளர்களிடம் கொடுத்த புகாரில் இந்த எதிரிகள் பெயர்கள் எதுவும் இல்லை என்றும் பிற்பாடு கால அவகாசமாக இந்த எதிரிகளில் 7 பேரை மட்டும் தொடர்பு படுத்தி ஒரு முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என் கணவரை வெட்டியதாக சொல்லப்படுகிற என் வீட்டு மேல்புற சுவரை ஒட்டியபடி உள்ள நெல்வயலில் இரத்தம் ஊத்தி கிடந்தது என்று சொன்னால் சரிதான். அதை போலீஸார் பார்த்தார்கள் குறித்துகொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அதனால் தான் 3ம் நபரை தவிர மற்றவர்களை அடியாளம் காட்ட தவறுகிறீர்கள் என்றும், அந்த 3 நபர்களையும் பொய்யாக அடையாளம் காட்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இதே நாளில் எங்கள் கார் டிரைவர் லெனினையும் வெட்டினார்கள் என்றும் மேற்படி நபர்கள் தான் என் கணவரையும் வெட்டினார்கள் என்றும் சொன்னால் சரிதான்.